2014 ஜூலை 31]

296—

துப்புரவுப் பணியாளர்கள் நியமனம்

***21303—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நமது மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் அமையப்பெற வேண்டும் என்ற திடமான எண்ணத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2012 ஆம் ஆண்டில் துப்புரவாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க ஆணையிட்டார்கள். இதன்படி அரசு ஆணை எண் 47, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2-3-2012-ல் 2,999 துப்புரவாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

முற்பகல் 11-10

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே கழிவறைகளை உபயோகிக்கக் கற்றுக்கொடுத்தால் பிற்காலத்தில் நல்ல சமுதாயம் உருவாவதற்கு அது வாய்ப்பாக அமையும். அதனால்தான், இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில், துப்புரவுப் பணியாளர்களை*

நியமித்திருக்கக்கூடிய கணக்குகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்காக தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தை அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் முழுமையாக நிறைவேற்றுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 100 விழுக்காடு கழிவறை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்கிற மாண்புமிகு அம்மா அவர்களின் திடமான எண்ணத்தின் அடிப்படையில், துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க ஆணையிட்டார்கள். மாணவர்களின் எண்ணிக்கை ஐநூறுக்குக் குறைவாகவுள்ள 998 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தலா ஒரு துப்புரவாளர் என 998 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும், மாணவர்களின் எண்ணிக்கை ஐநூறுக்கும் மேலாக உள்ள 996 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 1,005 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு துப்புரவாளர் என 2,001 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும் ஆகமொத்தம், 2,999 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது. இப்பணியிடங்களை நடைமுறையிலுள்ள வழிமுறைகளின்படி நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் பணியிடங்கள் மாவட்ட வாரியாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் நிரப்பப்பட்டு துப்புரவுப் பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி கழிவறை வசதி இல்லாத பள்ளிகள் கண்டெடுக்கப்பட்டு, 2,057 பள்ளிகளுக்குக் கழிவறை வசதிகள் உரிய நேரத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) கழிவறைகளைக் கட்டிக்கொடுத்தால் மட்டும் போதாது, குழந்தைகளின் சுகாதாரம் கருதி அக்கழிவறைகளைச் சுத்தமாகப் பராமரிப்பதும் மிகவும்

2014 ஜூலை 31]

இன்றியமையாத பணி என்பதனால் முதன்முறையாகக் கழிவறைகளைப் பராமரிப்பதற்காக நேற்றையதினம் 160 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 56 இலட்சத்து 55 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெறுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 297, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

297—

சுற்றுச்சூழல் மாசுபடுதல்

***29767—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூரிலுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபடுதலைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதங்களை வணங்குகிறேன்.*

மேட்டூரில் அமைந்துள்ள இரசாயனத் தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தடுக்கும்பொருட்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும், மேலும், மேட்டூரில் அமைந்துள்ள அனைத்து இரசாயனத் தொழிற்சாலைகளும் வாரியம் நிர்ணயித்தபடி காற்று மாசுத் தடுப்புச் சாதனங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து முறையாக இயங்கி வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.